# *சிற்றிலக்கியம்*

**(பாடக்குறிப்புகள்)**

## *1.குலோத்துங்கன் உலா*

ஒட்டக்கூத்தரால் பாடப்பட்ட நூல் மூவருலா. இதன் இரண்டாம் உலா குலோத்துங்க சோழன் உலா. முதல் உலா விக்கிரம சோழன் உலா இரண்டாம் உலா அவன் மகன்மீது பாடப்பட்ட குலோத்துங்க சோழன் உலா. இவன் இரண்டாம் குலோத்துங்கன் என வரலாற்றில் காணப்படுபவன். மூன்றாம் உலா இவன் மகன் இரண்டாம் இராசராசன் மீது பாடப்பட்ட இராசராசன் உலா.

இந்த நூல் உலா நூல் இலக்கண முறைப்படி அமைந்துள்ளது. 387 கண்ணிகளால் ஆனது. இவன் தில்லையில் செய்த திருப்பணிகள் 21 கண்ணிகளில் கூறப்படுகின்றன.

சோழமன்னர் எல்லாரும் கருநிற மேனி உடையவர்கள். இந்தக் குலோத்துங்கனின் மேனி நிறத்துக்கு ஏற்ப நீலநில ஆடை, நீல மணி முதலானவற்றைப் புனைந்துகொண்டு அவன் உலா வரும்போது வந்து நின்றாள் என்று இந்த நூலின் சில கண்ணிகளில் கூறப்பட்டுள்ளன.

இவன் தில்லைத் திருமுன்றில் இருந்த திருமால் சிலையைக் கடலில் எறிந்தான் என்பர்.

**தில்லைத் திருமன்ற முன்றில் சிறுதெய்வத்**

**தொல்லைக் குறும்பு தொலைத்தெடுத்து**

என இந்நூலில் வரும் கண்ணி இச் செய்தியைக் குறிப்பிடுகிறது.

இந்த நூலுக்குக் குலோத்துங்க சோழன் உலா உரை என்றும் பழைய உரை ஒன்று உண்டு. இந்தப் பழைய உரையின் பெருமையால் மூவருலாவில் இந்த உலா சிறப்பு மிக்கது என்பதை உணரமுடிகிறது.

## *2. குற்றாலக் குறவஞ்சி*

திருக்குற்றாலக் குறவஞ்சி தமிழ்ச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தமிழ்நாட்டின் தென்கோடியில் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் எனும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து அங்குள்ள ஈசரான குற்றாலநாதரைப் போற்றி, தெய்வக் காதல் பற்றிய கற்பனையை அமைத்துப் பாடப்பெற்ற நூல் ஆகும்.

குறவஞ்சி நாடகம் என்று போற்றப்படும் இந்நூல் வடகரை அரசனான சின்னணஞ்சாத் தேவரின் அவைப்புலவராக விளங்கிய திரிகூடராசப்பக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் திருநெல்வேலி மாவட்டம் தென்காசிக்கு அருகில் உள்ள மேலகரம் என்னும் ஊரைச் சார்ந்தவர் (இவர் திருவாவடுதுறை ஆதினத் தலைவராக விளங்கிய சுப்பிரமணிய தேசிகரின் சகோதரர் ஆவார்). திருக்குற்றாலநாதாரின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்ட இந்நூல் அன்றைய மதுரை மன்னனான முத்துவிஜரங்க சொக்கநாத நாயக்கரின் பாராட்டையும் பரிசையும் பெற்றது.

குறவஞ்சி நூல்களுள் பாராட்டுக்குரியதாக விளங்கி வருவதும், இன்றும் நாட்டிய நாடகமாக மேடைகளில் நடிக்கப்பட்டு வருவதும், இக்குற்றாலக் குறவஞ்சி ஆகும். திரிகூடராசப்பக்கவிராயர் குற்றாலத்தின் மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமகஅந்தாதி முதலிய நூல்களை

இயற்றியிருந்தாலும் இன்று பலரும் விரும்பிப் படிப்பது அவருடைய குறவஞ்சி ஒன்றே. குற்றாலக்குறவஞ்சியானது இறைவன்மீது பாடப்பெற்றதால் திருக்குற்றலாக்குறவஞ்சி எனும் பெயர் பெற்றது. நாடகச்சுவை நிரம்பிய இந்நூல் சந்த (ஓசை) நயத்தோடு கூடிய பாடல்களையும் கற்பனை நயம் கொண்ட பாடல்களையும் நிரம்பப் பெற்றுள்ளது. சான்றாக வசந்தவல்லி பந்தாடும் பாங்கைப்பற்றி எடுத்துரைக்கும்,

**செங்கையில் வண்டு கலின்கலின் என்று**

**செயம் செயம் என்றாட இடை**

**சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு**

**தண்டை கலந்தாடஇரு**

**கொங்கை கொடும்பகைவென்றனம் என்று**

**குழைந்து குழைந்தாடமலர்ப்**

**பைங்கொடி நங்கை வசந்த**

**சவுந்தார் பந்து பயின்றனளே**

என்ற பாடலைக் கூறலாம். இதைப்போல் சந்தநயம் கொண்ட இன்னும் பலபாடல்கள் இந்நூலாசிரியரால் இயற்றப்பட்டுள்ளன.

குற்றாலக் குறவஞ்சியில் தமிழகத்தின் காட்டு விலங்குகளைப் பற்றியும் செடியினங்களைப் பற்றியும் மிகப்பல குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

## *3. முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்*

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் என்னும் நூல் பிள்ளைத்தமிழ் வகையைச் சேர்ந்த சிற்றிலக்கியம். அதன்

ஆசிரியர் குமர குருபரர். நூலின் பாட்டுடைத்தலைவன் முருகன் பாடப்பட்டுள்ள அவனது பருவங்கள் பத்து. 17 ஆம் நுற்றாண்டைச் சேர்ந்த இந்நூலில் உள்ள மொத்தப் பாடல்கள் 101. இந்த நூலைப் பாடுதற்கு முருகப் பெருமான் 'பொன்பூத்த குடுமி' என்று அடியெடுத்துக் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது.

**நூலில் உள்ள சிறப்புச் செய்திகள்**

இந்த முருகனை இவர் 'தீராத வினை தீர்த்த தம்பிரான்' என்கிறார்.

இங்குள்ள தீர்த்தம் சித்தாமிர்த தீர்த்தம்.

இதன் விபூதி குண்டத்தில் எழுந்த வெண்சாந்தை எடுத்து உண்பர்.

சந்தான தீர்க்கத்திலிருந்து மண் எடுத்து உண்பர்.

முத்துக்குமார சுவாமியைக் காக்கும்படி திருமாலை அழைக்கும்போது 'பச்சைப் பசுங்கொண்டலே' என அழைக்கிறார்.

# *4. கலிங்கத்துப்பரணி*

கலிங்கத்துப்பரணி என்ற நூல் பரணி வகையைச் சார்ந்த சிற்றிலக்கியம் ஆகும். இந்நூல் முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்கப் போர் வெற்றி குறித்துப் பாடப்பட்ட நூல் ஆகும். குலோத்துங்கனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டது. அனந்தவர்மன் என்னும் வட கலிங்க மன்னன் திறை கொடாமலிருந்த பிழையின் காரணமாக முதலாம் குலோத்துங்க சோழனின் படைத்தலைவனும் அமைச்சனுமாயிருந்த கருணாகரத் தொண்டைமான் கி.பி. 1112 ஆம் ஆண்டில் போரில் வென்ற செய்தியே நூற்பொருள். இது செயங்கொண்டார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. இவர் தீபங்குடியைச் சேர்ந்த அருகர் ஆவார். இந்நூலின் காப்புச் செய்யுளால் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என அறியலாம்.

பரணி நூல்களுக்குத் தோற்றவர் பெயரிலேயே தலைப்புத் தரும் வழமைக்கு ஏற்ப தோல்வியடைந்த கலிங்கத்தின் பெயரை வைத்து, இந்த நூல் 'கலிங்கத்துப் பரணி' என அழைக்கப்படுவதாயிற்று.தமிழில் முதன் முதலில் எழுந்த பரணி நூல் கலிங்கத்துப் பரணியே ஆகும். இதுவே பிற்காலப் பரணி நூல்களுக்கு வழிகாட்டியாய் அமைந்த நூலாகும். இது கலித் தாழிசையாற் பாடப்பெற்றது. 599 தாழிசைகளை உடையது. காலம் (1078- 1118-குலோத்துங்க சோழன் காலம்) பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதி. சமகாலப் புலவரான ஒட்டக்கூத்தர் இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி எனப் புகழ்ந்துள்ளார்.

**பரணி**

பரணி என்பது போரில் ஆயிரம் யானைகளை வென்ற வீரனைப் பாடும் சிற்றிலக்கிய வகை ஆகும். போரிலிருந்து மீண்ட தலைமகன் பால் புலவியுற்ற தலைமகளது ஊடலைத் தீர்க்க புலவர்கள் வாயிலாவதும், புலவியாற்றிய பின்னர், தலைவன் சென்ற காட்டின் கொடுமையையும் தலைவனின் வீரத்தையும், அக்காட்டிலுள்ள பேய்கள் காளிக்குச் சொல்லுவதையும், காளி பேய்களுக்கு உரைப்பதையும் எடுத்துச் சொல்லும் வடிவுடன் பரணி நூலானது அமையும். பரணி நாளில் பேய்கள் கூடி நிணச்சோறு( இரத்தமும் இறைச்சியும் கலந்த உணவு) அட்டு ( சமைத்து) உண்டு மகிழ்ந்து ஆடிப்பாடிக் களித்து போரில் வென்ற மன்னரைப் புகழும் புகழ்ச்சியைக் கூறுவது. காளிக்குக் கூளிகள் கூறுவதாக அமைவது.